புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கவிஞர் இரா. மீனாட்சி கவிதைகளில் இயற்கை

*NATURE'S IN POET IRA MEENAKSHI POEMS*

**ஆய்வாளர்**
***மு. சபுரம்மா,***
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*முதுகலைத்*
*தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),* ***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***
*திருச்சிராப்பள்ளி - 620 020.*

**நெறியாளர்**
***முனைவர் சு. சாகுல் ஹமீது,***
*உதவிப்பேராசிரியர்,*
*முதுகலைத்தமிழாய்வுத்துறை,*
***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)*** *ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),*
*திருச்சிராப்பள்ளி - 620 020.*

**ஆய்வுச் சுருக்கம்**

*இயற்கையின்றி இப்பிரபஞ்சம் கிடையாது, பிரபஞ்சமின்றி எதுவுமே கிடையாது என்ற பேருண்மையை உணர்ந்த எழுத்தாளர்கள் அவற்றின் முக்கியத்துவத்தைத் தங்களது படைப்புகளின் வழியே மக்களுக்கு உணர்த்த பல்வேறு நிகழ்வுகளை எடுத்துரைக்கின்றனர். அதேபோன்று இரா.மீனாட்சி கவிதைகள் மூலமாக இயற்கையின் பல்வேறு அம்சங்களை, இயற்கைப் பொய்த்துவிடுமானால் ஏற்படும் விளைவுகள், இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகள், சங்ககாலம் தொட்டு ஆறுகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள உறவுகள், ஆறுகளால் ஏற்படும் பயன்கள், இயற்கையும் உழவுத்தொழிலும், கடலும் கடல்சார் உயிரினங்களும், அவற்றின் பயன்கள், இயற்கை சுழற்சி முறையும் அவற்றின் சமநிலையும் எவ்வாறு நடைபெறுகின்றன போன்ற பொருண்மைகளின் வழி கவிஞரின் கவிதைகளை ஆராய்வதே இதன் நோக்கமாகும்.*

***கலைச் சொற்கள்:*** *உழவுத்தொழில், பருவகாலம், ஆறுகளின் பாரம்பரிய அழகு, காவிரியாற்றின் சிறப்பு, அதிகாலைப் பொழுது, இயற்கைச் சீற்றம்*

***முன்னுரை***

மக்கள் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிப்பது இயற்கையாகும். மக்கள் தங்கள் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் முயன்றாலும் இயற்கைப் பொய்த்துவிடின் அனைத்தும் நின்றுவிடும். மக்களின் முயற்சிக்கு இயற்கைக் கைகொடுத்தால் மட்டுமே முயற்சி வெற்றி பெறும். எனவே கவிஞர் சுட்டும் இயற்கையின் இன்றியமையாமையை இக்கட்டுரையில் காண்போம்.

***மாறிவரும் பருவகாலம்***

பருவகாலங்கள் மாறிவரும் போது அனல் பறக்கும், இதனால் மரம், செடி, கொடிகளெல்லாம் காய்ந்துவிடும் என்பதை,

***"செடி, கொடி மரங்களெல்லாம்***
***செத்தவையே அசைவின்றி***
***விரைத்துக் கிடக்கின்றன..." (கூழாங்கல், ப. 81)***

கோடையின் அனலால் செடி, கொடி, மரங்களின் இலைகள் உதிர்ந்துவிடுவதன் காரணமாக இறந்தவைகள் போலக் காட்சியளிக்கின்றன. இதனால் பேரிழப்பு நேரிடுகிறது என்று நம்மை விழிப்படையச் செய்கிறார். இக்கருத்தையே வள்ளுவர்,

***'' விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே***
***பசும்புல் தலைகாண்பு அரிது" (திருக்குறள் 16)***

மேகத்திலிருந்து மழைத்துளி விழாது பருவமழை பொய்த்துவிட்டால், பசும்புல்லின் நுனியைக் கூடக் காணமுடியாது. பசும்புல்லினையும், செடிகொடிகளையும் நம்பியிருக்கும் விலங்கினங்கள் பசியால் வாடிவிடும் நிலைஉருவாகிவிடும் என்கிறார். இதனையே,

***"பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட***
***விசும்பின் ஊழி ஊழுழ் செல்ல..." (பரிபாடல், ப. 16)***

பசியப் பொன்மயமானத் தேவருலகமும், இம்மண்ணுலகமும் ஊழி முடிவிலே அழிந்துபாழ்பட்டுப் போயின. வெளியாகிய வானமும் இல்லாது போய்விடும். இயற்கையின் சீற்றத்தால் எதுவும் இல்லாது போய்விடும் என்று பரிபாடல் உணர்த்துகிறது.

***உழவுத் தொழிலே உயர்வானது***

இயற்கையோடு ஒன்றிணைந்த உழவுத் தொழிலே உயர்வானது என்பதைக் கவிஞர் கூழாங்கல் என்னும் கவிதைத் தொகுப்பில்,

***"தொழுவங்களை அலங்கரிக்கும்***
***உழுதவரின் உழக்குத்தான்***
***உழைப்பின் மங்கலக் கிழக்கு..." (கூழாங்கல், ப. 115)***

மாடு கட்டும் தொழுவங்களை அலங்கரிக்கும் உழவனின் உழைப்பு உன்னதமானது. அவ்வுழவனின் உழைப்பால் நாளைக் கிழக்கு மங்களகரமாக உதயமாகுமென்று மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள தொடர்பை எடுத்துரைக்கிறார். உழ்வுத் தொழில் குறித்து வள்ளுவர்,

***"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்***
***உழந்தும் உழவே தலை" (திருக்குறள் 1031)***

உலகத்தவர் பிறதொழில்களைச் செய்து வாழ்ந்தாலும், முடிவில் உணவின் பொருட்டு உழவரையே எதிர்பார்ப்பர். ஆகையால் உடல் வருந்த உழைத்தாலும் உழவே தலையாய தொழில் என்று குறிப்பிடுகின்றார். இதன் மூலம் இயற்கை மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று என்பதை அறியலாம்.

***ஆறுகளின் பாரம்பரிய அழகு***

ஆறுகளின் இயற்கை அழகையும், அவற்றோடு ஒன்றிய மக்களின் பசுமையான வாழ்வியல் நினைவுகளையும் கவிஞர்,

***"காவிரிக்கால் அய்யன் வாய்க்கால்...***
***வைகை என்றால் வெள்ளி மணல் பரப்பு...***
***எல்லா ஆறுகளும் இரு கரைகளுக்குள்ளும்***
***நம்மை இருத்தி வைத்துக் கொள்கின்றன..." (கொடிவிளக்கு, ப. 95-97)***

விடுமுறை நாட்களில் தாத்தா, பாட்டியுடன் தாமிரபரணி ஆற்றங்கரையோர முருகன் கோயிலில் வழிபாடு நடத்தி, ஆற்றில் நீராடியக் காட்சியைக் கூறியுள்ளார். காவிரியோர அய்யன் வாய்க்காலிலே அத்தையும் சித்தியும் தங்கையும் தோழியும் மதகடியிலும் படித்துறையிலும் கூடி விளையாடி, கஸ்தூரி மஞ்சல் பூசி, சந்தனக் குளியலிட்டு, வெட்கத்துடன் தெருக்களில் நடந்துச் சென்ற நினைவுகளையும் கூறியுள்ளார். மேலும் வைகையாற்றின் வெள்ளிமணல் பரப்பிலே, மேகம் போல் தரையில் கிடக்கும் ஊற்றுக் குழிகளிலிருந்து தன் இரு கைகளால் அள்ளிப் பருகியப் புண்ணிய நீரையும் கூறியுள்ளார். மண்டபக் காற்றையும், அழகர் குதிரையையும், சங்கத் தமிழில் புலவர் இசைக்கும் இலக்கியச் சோலையையும் குறிப்பிட்டுள்ளார். நொய்யல் ஆற்றில் தென்னங் கீற்றால் எத்தனைப் படகுகள் தேசாந்திரம் போயிருக்கும்? அந்த இயற்கை மணற்பரப்பிலே தம் இரு கைவிரல்களாலும், கால்களாலும் விளையாடிய பசுமை நினைவுகளையும் பகிர்ந்துள்ளார். இதன் மூலம் ஆறுகள் அதன் இயற்கையழகையும் தாண்டி, மக்களின் இணைபிரியாத தோழனாகவும் விளங்கியதையும், ஆற்று வளங்களை நாம் பாதுகாப்பதன் அவசியத்தையும் அறியலாம். இதே கருத்தை வலியுறுத்தி பத்துப்பாட்டில்,

***காவிரியாற்றின் சிறப்பு***

***"மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மாண்***
***எல்லைதருநன் பல்கதிர் பரப்பிக்...***
***நறையு நரந்தமுமகிலுமாரமும்***
***துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி"***
***(பத்துப்பாட்டு,பொருநராற்றுப்படை, பா.வ. 232-239)***

தன் பகையரசர் நடுங்கும்படி விளங்கும் மாண்புகளைப் பெற்ற பகல் பொழுதைத் தோற்றுவிக்கும் பகலவனின் வெப்பத்தால் விளைநிலங்களிலுள்ள பயிர்களெல்லாம் கருகினாலும், மரக்கிளைகளின் கொம்புகள் வெப்பத் தீயினால் எரிந்தாலும், மலைகளிலிருந்து வீழும் அருவிகளும் பொய்த்துப் போனாலும், இடி மின்னலுடன் கூடியமேகங்கள் கடல் நீரைமுகர் தலைமறந்து பெரும் பஞ்சம் தோன்றினாலும் கூட காவிரி நீரானது, நறுமணங்களுடன் கூடிய நறைக்கொடியையும், நரந்தம் புல்லையும், அகிலும் சந்தனமும் கூடியச் சுமைகளைச் சுமந்து கொணர்ந்து புனலாடும் மகளிருக்குக் கரைகள் தோறும் பரிசிலாகக் காவிரித்தாய் நல்கினாள் என்று கூறுகிறது. இதன் மூலம் இயற்கையின் பொக்கிஷமான காவிரியாற்றின் பாரம்பரிய பெருமைகளையும், அதிலிருந்து மக்கள் பெறும் பயன்களையும் அறியமுடிகிறது.

***அதிகாலைப் பொழுது***

ஹாலந்து நாட்டு அதிகாலைப் பொழுதின் இயற்கைக் காட்சிகளைக் கவிஞர் பின்வருமாறு விளக்குகிறார்.

***"செழித்திருக்கும் தழைகளுடன் குறும் மரங்கள்***
***எழிலார்ந்த கரைகளுக்குள்...***
***இனி இந்தக் காலையில்***
***என் முதல் பார்வை எட்டும் பரப்புகளில்..." (ஓவியா,எங்கும் புதியது, ப.75)***

பசுமையான தழைகளுடன் கூடியகுறும் மரங்களும், எழில் மிகுந்த கரைகளுக்குள் நெளிந்தோடும் ரைன் நதியும், வவ்வால் நதியும், தொலைதூர சிற்றூரில் காணும் மாதா கோயிலையும் காட்சிப்படுத்துகிறார;. மேலும் தீவுகள் போல காட்சி தரும் சாலைகளும், நெடுந்துயர்ந்து காணும் அலங்கார விளக்குத் தூண்களும், பலவண்ண மலர்களும், தம்மைத் தொட்டுச் செல்லும் ஆரஞ்சுப் பழங்களின் நறுமணங்களைப் பற்றியும் விளக்குகிறார். அந்த அதிகாலைப் பொழுதிலே தன் முதல் பார்வை எட்டும் வரைக் கால்வெள்ளையும், கால் கருப்பும் கலந்த மெழுகுப் பூசிய சாம்பல் பனிமூட்டங்களையும் விவரிக்கிறார். அவரது அமைதியான மனம் அதைக் கண்டு சற்றே திடுக்குற்ற போது, ஃபீனிக்ஸ் பறவை போல சாம்பல் குவியலுக்குள்ளிருந்து, தனது பொற்கரங்களால் இந்த உலகையே மாற்றி எழுத எழுந்து வந்த பகலவனால் கிழக்கும் வெளுத்தது என்கிறார;.

இயற்கைச் சூழல் நம் வாழ்க்கையை அலங்கரித்து, நம்மை வழி நடத்துவதன் மூலம் இயற்கைக்கும் மனித சமூகத்திற்கும் இடையே உள்ள இணைபிரியாத உறவையும் அறியலாம். இதனையே கலித்தொகையில், தலைவன் சார்ந்த குறிஞ்சியின் அதிகாலைப் பொழுதின் அழகைத் தலைவியின் அழகோடு ஒப்பிட்டு, அந்த அழகுத் தலைவனின் பிரிவால் வாடுவதைக் கண்ட தோழி தலைவனிடம், தலைவியின் அழகின் மீதுள்ள பொறாமையினாலோ அவள் அழகைச் சிதைக்கிறாய் என்று வினவுவதாக அமைந்துள்ளது.

***"விடியல் வெங்கதிர் காயும் வேய் அமல் அகல் அறை,***
***கடி சுனை கவினியகாந்தள் அம் குலையினை,***
***அருமணிஅவிர் உத்திஅரவுநீர் உணல் செத்து,***
***பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடை கனை பெயல்..."***
***(கலித்தொகை,குறிஞ்சிக் கலி, பா.9)***

விடியற்காலைப் பொழுதிலே வீசும் இளவெயில் நம் தலைமீது படாதவாறு, புள்ளிமுகக் களிறுகளோடு புலிகள் சண்டையிட்டுத் திரியும் அகன்ற மலைச் சரிவிலே காணும் தலைவியின் தோள்களுக்கு ஒப்பான அடர்ந்த மூங்கில் காடுகள், அங்கே மணநீர் நிறைந்த சுனை ஊற்றுகளும், அதன் கரைதனிலே தலைவியின் கண்களுக்கு நிகராக பூத்துக் குலுங்கும் அழகியக் காந்தள் மலர்கள். இதனை மணியுடைய பாம்புகள் தான் நீருண்கின்றன என நினைத்து சினம்கொண்ட இடியானது, அந்த மலைகளையே தலைகீழாக பெயர்த்து விடுவதுப்போல குமுறியது. உடன் காற்றோடு கலந்த பெருமழையும் கொட்டத் துவங்கியது. தலைவியின் அழகின் பொலிவுக்கு நிகரான வேங்கைப் பூக்கள் நிறைந்த பரந்தமலைச் சாரல்களிலே எதிரொலித்த இடி முழக்கங்களின் சத்தம் கேட்டுச் சிறுகுடியிருப்புகள் உள்ளே உறங்கியக் கானவர்கள் கண் விழித்தனர் என்று கூறுகின்றது. இதன் மூலம் சங்ககாலம் தொட்டே இயற்கைக்கும் மனித சமூகத்திற்கும் இடையே உள்ள தொடர்பைக் காணமுடிகிறது.

***இயற்கைச் சீற்றம்***

***"நீதான் புயலா***
***கடலலைகளின் உப்புப் படிவங்களைப்***
***புரட்டி எடுத்து வந்து உருட்டி வீசினாய்***
***உடும்புப் பிடியாக மரங்களைப் பிடித்து***
***உலுக்கி யெடுத்தாயே பாவம்" (ஓவியா, ப.55)***

புயலே! நீ கருமேகங்களைக் குழைத்து அலைகடல் மீது பூசியதால் கடல் மேற்பரப்பில் அலைகளுக்கு மேல் நிலவும் இருண்ட சூழல் கண்ணங்கரேலென்ற இலவம் பஞ்சுவெடித்தது போல் உள்ளது. பொதுவாக இரவு நேரக் கடற்பரப்பில் காணும் மின்மினிக்களின் ஒலித்துளிகளையும், வெளிச்சப்புள்ளிகளையும் எங்கே உதறினாய்? என புயலிடம் வினவுகிறார். இரவுமலர்களின் நறுமணத்தை ஊர் எல்லையை விட்டே

*துரத்திவிட்டு தலைநகரின் ஊளைச் சத்தத்தை உன் குரலில் பொறுத்திக் கொண்டாயோ? என்கிறார். கடலலைகளின் மூலம் உப்புப் படிவங்களைப் புரட்டி எடுத்து வந்து வீசிச் சென்றாயே, அதோடு நின்றுவிடாமல் உடும்புப் பிடியாக மரங்களையெல்லாம் ஏன் பிடித்து உலுக்கிச் சாய்த்து, இடம் வலம் என எல்லாத் திசைகளையும் மாற்றிப் போட்டாய்? எனக் கேள்வி எழுப்புகிறார். வேப்பமரம் முதல் மாமரம், நாவல் மரம் என வாதுமை மரம் வரை அனைத்தையும் சாய்த்து விட்டாயே. நேற்றைய மரங்களெல்லாம் இன்று விறகாகிக் கிடக்கின்றனவே, எங்கள் பசுமையான ஆசைகளையும் நிழல் இருப்புகளையும் தகனம் செய்திடவா புல்லை மட்டும் நிறுத்தி விட்டாய்? காண்பதற்கறிய பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள், வயல்வெளியில் விதைத்த நாற்றுகள், பழக்கொட்டைகள் என அனைத்துமே கிழிந்த ஈச்சம்பாய் சிம்புகளாக சாலைகளை மூடிக் கிடப்பதையும் விவரித்து இயற்கைச் சீற்றமான புயலைச் சாடுகிறார். இதனையே திருவள்ளுவர்,*

***"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து***
***உள்நின்று உடற்றும் பசி" (திருக்குறள் - 13)***

*மழைப் பெய்ய வேண்டியக் காலத்தில் பெய்யாமல் பொய்த்துவிடுமானால், கடலால் சூழப்பட்ட இப்பரந்த உலகில் பசி தொடர்ந்து உயிர்களையெல்லாம் வருத்தும். இதிலிருந்து மனிதர்களுக்கு உணவளிப்பதுவும் மழையே, அதேசமயம் இயற்கைச் சமநிலை மாற்றத்தால் மழை பொய்த்துவிட்டால் வறட்சி ஏற்பட்டு மக்கள் துன்புற காரணமாய் இருப்பதுவும் மழையே. இயற்கை நமக்கு நன்மையையும், தீமையையும் அளிக்கவல்லது. எனவே நமக்கு தீமை ஏற்படாமல் இருக்க இயற்கையைப் பாதுகாப்பது நமது கடமையாகும். இதனையே பாரதியார்,*

***"நடுக் கடல் தனிக் கப்பல்***
***வானமே சினந்து வருவது போன்ற புயற் காற்று,***
***அலைகள் சாரி வீசுகின்றன, நீர்த்தூளிப் படுகின்றன,***
***அவை மோதி வெடிக்கின்றன, சூறை யாடுகின்றன..."***
***(பாரதியார் கவிதைகள், வசனகவிதைத் தொகுப்பு, ப.511)***

*நடுக்கடலில் தன்னந்தனியே ஒரு கப்பல் செல்லும் போது, திடீரென வானம் சினம் கொண்டுவருவது போல் புயல் காற்று வீசுகிறது. இதன் விளைவாக தோன்றிய வானளாவிய அலைகளால் கப்பல் நிலைக் குழைந்து சூறையாடப்படுகிறது. இறுதியாக அக்கப்பல் பெரும் பாறையில் மோதி இருநூறு உயிர்களைப் பலியிடுகின்றது. அந்த ஆன்மாக்கள் யுக முடிவின் அனுபவத்தை அறிந்து சென்றன என்று குறிப்பிடுகிறார். பஞ்சபூதங்கள் என அறியப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கையின் அஸ்திரங்கள் அவற்றின் சமநிலை மாறும்போது பூகம்பம், சுனாமி, எரிமலை, புயல் மற்றும் அதிகனமழையோ அல்லது வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டு மனித சமூகத்திற்குப் பேரழிவை ஏற்படுத்தும். எனவே இயற்கையைப் பாதுகாப்பதன் அவசியத்தை அறியலாம்.*

**கடலின் மேன்மை**

*இயற்கையின் அங்கமான கடலின் மகத்துவத்தைப் பற்றி கவிஞர்,*

***"கடல்! ஒரு நீலப் பள்ளம்***
***பெரும் திமிங்கிலக் காடு***
***பவளப்பூத் தோட்டம்***
***பாசிப் பச்சை உணவகம்..." (இரா. மீனாட்சி, கொடிவிளக்கு, ப.115)***

*இந்த பூமிப்பந்திலே நான்கில் மூன்று மடங்கு நீரால் சூழப்பட்ட கடலானது நீலநிறமான அகன்று விரிந்த பெரும் பள்ளம். அதிலே திமிங்கலக் கூட்டங்கள் வாழும் பெரும் பெரும் காடுகளும், கடலுக்கடியில் பலவண்ண பவளப்பாறைகளின் பவளப்பூத்*

*தோட்டங்களும் உண்டு. மேலும் அதில் அடர்ந்த பாசிபடிந்த செடி கொடிகள் எனும் கடல்வாழ் உயிரினங்களின் பாசிப்பச்சை உணவகங்களையும் காணலாம். இத்தகைய இயற்கைச் சூழல் பல்லாயிரக் கணக்கான வகைகளுடன், பலவண்ண நிறங்களையும், வடிவங்களையும் கொண்ட கடல்வாழ் உயிரினங்களின் உறைவிடமாகவும் விளங்குகிறது. இதன் மூலம் மனிதர்களுக்குக் கடல்சார் உணவு வகைகளும் கிடைக்கின்றன.*

*கடல்வாழ் உயிரினங்கள், கடல்சார் கனிமவளங்கள் மற்றும் கடல் போக்குவரத்து மூலமாகவும் இவ்வுலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவது மட்டுமின்றி, நீர் சுழற்சி முறை மூலமாக மழைப்பொழிவிற்கு முக்கியக் காரணமாக அமைந்து இயற்கைச் சமநிலையையும் கடல் நீர் பாதுகாக்கின்றது என்பது விளங்கும். வள்ளுவரும் இக்கருத்தை வலியுறுத்தி,*

***"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி***
***தான்நல்கா தாகி விடின்" (திருக்குறள் - 17)***

*கடல் நீரானது வெப்பமடைந்து நீராவியாகி மேகக் கூட்டங்களின் வழியே திரும்பவும் அந்நீரையே மழையாகப் பெய்கிறது. இச்சுழற்சி முறை நடைபெறவில்லை எனில் கடல் வளங்களும் குன்றிவிடும் என்று கூறுகிறார். கடல் நீரின்றி மழைப்பொழிவு நடைபெறாது எனவே கடல் நீரின் பங்கு இன்றியமையாதது.*

***இயற்கை அழகு***

*இயற்கை அழகு மனிதர்களுக்கு மனஅமைதியும் புத்துணர்ச்சியும் அளித்து அவர்களை வழிநடத்திச் செல்வதன் மூலமாக, அவர்களின் வாழ்வில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக விளங்குவதை உணர்ந்த,*

***"மலைமுகடுகள்***
***தலை உயர்த்தி நிற்கின்றன...***
***நீலச் சங்கிலியின்***
***காலத் தொடர்ச்சி..." (இரா.மீனாட்சி, மூங்கில் கண்ணாடி, ப.99-100)***

*பசுமையான அந்த மலை முகடுகளிலிருந்து பாயும் அருவிகளின் அழகையும், வண்ணங்களின் சங்கிலித் தொடரையும் தாண்டி, கடல் நீரானது மழைநீர் மற்றும் ஆறுகளில் இருந்து வெளியாகும் உபரி நீரையும், ஆகாயம்சார் மழைமேகங்கள் கடல் நீரையும், தாவரங்கள் மற்றும் பூக்கள் ஆகாயத்திலிருந்துப் பொழியும் மழைநீரையும் என இயற்கை வளங்கள் ஒவ்வொன்றும் மற்றவைகளைச் சார்ந்துள்ளன என்பதை அறியலாம். இதன் மூலம் இயற்கைச் சுழற்சிமுறை இவ் உலகின் சமச்சீரான இயக்கத்திற்கு அவசியமானதென்பது விளங்கும். இக்கருத்தையே கலித்தொகையில்,*

***"வீயகம் புலம்ப, வேட்டம் போகிய***
***மாஅல் அம் சிறைமணி நிறத் தும்பி...***
***'வேங்கைஅம் சினை'எனவிறற் புலி முற்றியும்,***
***பூம் பொறியானைப் புகர; முகம் குறுகியும்" (கலித்தொகை,குறிஞ்சிக் கலி, ப.107)***

வேங்கைமலர்கள் பூத்துக் குலுங்கும் மலைச் சாரலிலே, வேங்கையின் பூங்கொத்துக்கள் போன்ற தோற்றமுடையப் புலியும், வேங்கையின் பூந்தளிர் போன்ற புள்ளிளை முகத்திலேயுடைய யானையும் தம்முள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. பூத்துக் குலுங்கிய வேங்கை மலர்களோ வண்டுகளின் வரவை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்க, ஆனால் அந்த வண்டுகளோ புலியையும் யானையையும் வேங்கை மலர்கள் என மயங்கி, அவற்றையே மாறி மாறி வட்டமிட்டு பறந்து கொண்டிருக்க, போரிட்ட அவ்விரு விலங்குகளை வண்டுகள் சமாதானப்படுத்துவது போன்ற இக்காட்சியைக் கலித்தொகையில் காணலாம். இயற்கை வளங்கள் எவ்வாறு ஒன்றோடு ஒன்று சார்ந்து அவற்றின் சுழற்சி முறையில் இயற்கையின் சமநிலை பாதுகாக்கப்படுகின்றதோ அதுபோல இயற்கையின் ஓர் அங்கமான காடுகளும்

மலைகளும் அவற்றைச் சார்ந்து வாழும் வனவிலங்குகளால் பாதுகாக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகின்றது என்பது விளங்கும். இதனொட்டியே பரிபாடலில்,

***"நிறைகடல் முகந்துராய் நிறைந்துநீர் துளும்புந்தம்***
***பொறைதவிர் பசைவிடப் பொழிந்தன்று வானம்"***

***(பரிபாடல், ஆறாவதுபாடல் ப.54)***

மேற்குத்தொடர்ச்சி மலைச்சரிவில் வருசநாட்டு மேகமலைப் பகுதியில் உள்ள வெள்ளிமலைச் சிகரத்திலிருந்து உற்பத்தியாகும் வைகையாறு கார்காலப் பருவத்தில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய காட்சியைப் பரிபாடல் பின்வருமாறு விளக்குகிறது. கடலிலுள்ள நீரை முகர்ந்து கொண்ட மேகங்கள் வானெங்கும் வியாபித்திருந்தன. அவைகள் தம்மிடத்தே நிறைந்துத் தளும்பும் நீரின் பாரம் தாங்காது அவற்றை இறக்கி வைத்துக் களைப்பாற வேண்டுமென நினைத்தன போலும். எனவே அவை பெருமழையை பெய்ததன் விளைவாக நிலப்பகுதிகள் முழுவதுமே அம்மழை நீரால் நிரம்பி ஓடின. அதைக்கண்ட மலைவாழ் உயிரினங்கள் வருந்தினாலும், மயிலினங்கள் மகிழ்வால் ஆடத் தொடங்கின. அந்நீர் அருவிகள் மலைப் பகுதிகளில் படிந்திருந்த தூசிகளைத் துடைத்துக் கொண்டு மலையடிவாரத்தை நோக்கிப் பாய்ந்தன. அருவிகளிலிருந்துப் பெருக்கெடுத்த புனல் நீரானது பல இடங்களுக்கும் பரவத் தொடங்கின. அது கண்ட உழவர்கள் விரைந்து அவர்தம் தொழிலை மேற்கொண்டு தனது வாழ்வை மேம்படுத்திக் கொள்கின்றனர். இயற்கை வளங்களையெல்லாம் ஒன்று மற்றவைகளைச் சார்ந்துள்ளது போன்று வன உயிரினங்களும் மனிதர்களும் ஒவ்வொன்றும் இயற்கை வளங்களையே சார்ந்துள்ளது விளங்கும். இச்சுழற்சி முறையே இவ்வுலகின் நிலைத் தன்மைக்கு ஆதாரமாகவும் விளங்குகின்றது.

### முடிவுரை

மனிதர்களால் இயற்கையைத் தோற்றுவிக்கவோ அல்லது அவைகளை இயக்கவோ முடியாது. இப்பிரபஞ்சத்திலுள்ள இயற்கையின் அங்கமாக விளங்கும் பஞ்சபூதங்களும், அந்த இயற்கையைச் சார்ந்து வாழும் அனைத்து உயிரினங்களும் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ள அவைகள் ஒவ்வொன்றும் மற்;றவைகளைச் சார்ந்தே இருக்கின்றன. அதற்கு அந்த இயற்கை வளங்களின் சுழற்சி முறையும், சமநிலைத் தன்மையும் ஒரே சீராக அமைய வேண்டும். அப்போதுதான் அது அனைத்து உயிரினங்களுக்கும் நன்மை பயக்கும். மாறாக அவ்வாறு இல்லையெனில் அது அழிவை ஏற்படுத்தும் என்பதைக் கவிஞர் இரா. மீனாட்சி கவிதைத் தொகுப்புகளின் மூலம் அறிய முடிகிறது.

### சான்றெண் விளக்கம்


1. இரா. மீனாட்சி, கூழாங்கல், பதிப்பு - 2018
2. பாரதியார்கவிதைகள், பதிப்பு
3. திருக்குறள், பதிப்பு - ஜுன் 2014
4. இரா. மீனாட்சி, மூங்கில்கண்ணாடி, பதிப்பு - 2020
5. நான்மணிக்கடிகை, பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுப்பு, பதிப்பு - 2009
6. இரா. மீனாட்சி, உதயநகரிலிருந்து, பதிப்பு - 2006
7. இரா. மீனாட்சி, வாசனைப்புல், பதிப்பு-டிசம்பர், 2006
8. புறநாநூறு, பதிப்பு - 2010
9. இரா. மீனாட்சி, நெருஞ்சி, மீனாட்சி கவிதைகள் தொகுப்பு, பதிப்பு-டிசம்பர்
10. நாலடியார், 6ஆம்பதிப்பு - ஜுன் 2013
11. இரா. மீனாட்சி, சுடுபூக்கள், மீனாட்சி கவிதைகள் தொகுப்பு, பதிப்பு- 2002
12. இரா. மீனாட்சி, தீபாவளிப்பகல், மீனாட்சி கவிதைகள் தொகுப்பு, பதிப்பு - 2002
13. இரா. மீனாட்சி, கொடிவிளக்கு, முதற்பதிப்பு, டிசம்பர் 2009